திருப்பூரில் மல்லிகைப் பூ கிலோ ரூ.1,600–க்கு விற்பனை



திருப்பூர், நவ. 20: பனிப்பொழிவு காரணமாக வரத்து குறைந்துள்ளதாலும், சுப முகூர்த்த தினத்தை முன்னிட்டும் திருப்பூர் பூ மார்க்கெட்டில் பூக்களின் விலை உயர்ந்துள்ளது. ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.1,600 வரை விற்பனையானது.

திருப்பூர் பூ மார்க்கெட்டிற்கு சுற்றுவட்டாரக் கிராமங்கள் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து தினமும் டன் கணக்கில் பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. கடந்த வாரத்தில் அடுத்தடுத்து முகூர்த்த தினங்கள் வந்ததால் ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.1,000 முதல் ரூ.1,200 வரை விற்பனையானது. அதன்பின்னர் சற்று விலை குறைந்து கிலோ ரூ.800–க்கு விற்கப்பட்டது.

கார்த்திகை மாதம் தொடங்கியுள்ளதால் நள்ளிரவு மற்றும் அதிகாலை நேரங்களில் பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. இரவில் பனியின் தாக்கம் மற்றும் காலையில் வெயில் சுட்டெரிப்பதால் செடிகளில் பூக்கள் பூப்பது குறைந்துள்ளது. இதனால் மார்க்கெட்டிற்கு பூக்களின் வரத்து குறையத் தொடங்கியுள்ளது. வரத்து குறைந்துள்ள சூழலில், சுபமுகூர்த்த தினங்கள் வருவதால் பூக்களின் தேவை அதிகரித்து விலை உயர்ந்துள்ளது.

அதன்படி திருப்பூர் மார்க்கெட்டில் வெள்ளிக்கிழமை ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.1,400 முதல் ரூ.1,600 வரை விற்பனையானது. அதேபோல, முல்லை கிலோ ரூ.600 முதல் ரூ.800 வரையிலும், ஜாதிப்பூ ரூ.600, அரளி ரூ.450, சம்பங்கி ரூ.360, செவ்வந்தி ரூ.160 என விற்பனையானது. பனிப்பொழிவு தொடர்வதால் வரும் நாள்களிலும் பூக்களின் வரத்து குறைந்து விலை மேலும் உயர வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

முத்தூர் அருகே

இருசக்கர வாகனங்கள் மோதல்: விவசாயத் தொழிலாளி உயிரிழப்பு

வெள்ளக்கோவில், நவ. 20: முத்தூர் அருகே இருசக்கர வாகனங்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் விவசாயத் தொழிலாளி உயிரிழந்தார்.

திண்டுக்கல் மாவட்டம், தவசிமடை பழைய தபால் அலுவலகத் தெருவைச் சேர்ந்தவர் சந்தியாகு (54). இவரது மனைவி அந்தோணியம்மாள். சந்தியாகு கடந்த 10 ஆண்டுகளாக திருப்பூர் மாவட்டம், முத்தூர் சின்னமுத்தூரில் உள்ள கோவிந்தசாமி என்பவரது தோட்டத்தில் தங்கியிருந்து விவசாயக் கூலி வேலை செய்து வந்தார்.

இந்நிலையில் சந்தியாகு முத்தூர் கடைவீதிக்குச் செல்வதற்காகத் தனது உரிமையாளருக்குச் சொந்தமான இருசக்கர வாகனத்தில் ஈரோடு – முத்தூர் சாலையில் வெள்ளிக்கிழமை சென்று கொண்டிருந்தார். தண்ணீர்ப்பந்தல் அருகே, வந்தபோது பின்னால் வந்த மற்றொரு இருசக்கர வாகனம், இவரது வாகனத்தின் மீது மோதியது.

இதில் பலத்த காயமடைந்த சந்தியாகுவை அக்கம்பக்கத்தினர் மீட்டு காங்கயம் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால், வழியிலேயே அவர் உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் திருச்சி மாவட்டம், முசிறி தாலுகா திருத்தலை அஞ்சல் அய்யம்பாளையத்தைச் சேர்ந்த மனோகரன் மகன் முரளி என்பது தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து உயிரிழந்த சந்தியாகுவின் மனைவி அந்தோணியம்மாள் அளித்த புகாரின்பேரில் வெள்ளக்கோவில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில அகராதி

திருப்பூர், நவ.20: திருப்பூர், செல்லம்மாள் காலனி மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பயிலும் 45 மாணவர்களுக்கு ரூ. 30 ஆயிரம் மதிப்பில் ஆங்கில அகராதிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வுக்கு, பள்ளித் தலைமை ஆசிரியர் வே.நாகராஜ் கணேஷ்குமார் தலைமை வகித்தார்.

லட்சுமி கார்மெண்ட்ஸ் உரிமையாளர்கள் சுப்பிரமணி, சிவக்குமார் ஆகியோர் தலா ரூ.740 மதிப்புள்ள ஆங்கில அகராதிகளை 45 மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக திருப்பூர் மாநகர காவல் உதவி ஆணையர் கணேஷ் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஆங்கில அகராதிகளை வழங்கி பேசுகையில், தினமும் 5 ஆங்கில சொற்களை கற்பதன் மூலம் ஆண்டிற்கு 1,500 சொற்களைக் கற்றுக் கொண்டு ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ள முடியும். சிறு வயதில் இருந்தே அகராதியினைப் பார்த்து பொருள் தெரிந்து கொள்வது பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

விழாவில் திருப்பூர் மாநகராட்சி 24ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் நாகராஜ், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பொன்.பழனிச்சாமி, பொருளாளர் நாகராஜ், பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் பாண்டி மீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.



மாணவர்களுக்கு ஆங்கில அகராதிகளை வழங்கிய திருப்பூர் மாநகர காவல் உதவி ஆணையர் கணேஷ்.

திருமுருகன்பூண்டியில் ரிசர்வ் சைட்களில் உள்ள கோயில்களை இடிக்க இந்து முன்னணி எதிர்ப்பு



திருமுருகன்பூண்டி நகராட்சியை முற்றுகையிட்ட இந்து முன்னணியினர், பொதுமக்கள்.

அவிநாசி, நவ.20: திருமுருகன்பூண்டி செந்தில் நகர், ஜெகநாதன் நகர் ஆகிய பகுதிகளில் ரிசர்வ் சைட்டுகளில் வழிபாட்டில் உள்ள கோயில்களை இடிக்க எதிர்ப்புத் தெரிவித்து, இந்து முன்னணியினர் வியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து, இந்து முன்னணியினர் திருமுருகன்பூண்டி நகராட்சி அலுவலகத்தை வெள்ளிக்கிழமை முற்றுகையிட்டு அளித்த மனுக்களில் கூறியிருப்பதாவது:

திருமுருகன்பூண்டி நகராட்சி 13-ஆவது வார்டு ராக்கியாபாளையம் செந்தில் நகர் பகுதியில் 40-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளது. இங்கு, வீட்டு மனை பிரிக்கப்படும்போது, ரிசர்வ் சைட்டில் பூங்கா மற்றும் கோயிலுக்காக தனித்தனியாக இடம் ஒதுக்கப்பட்டது. தற்போது அங்கு செல்வ விநாயகர் கோயில் தொடர்ந்து பொதுமக்கள் வழிபாட்டில் உள்ளது. 28 சென்டில் விளையாட்டுப் பூங்கா உள்ளது. விநாயகர் கோயில் அருகே 6 சென்ட் காலி இடமும் உள்ளது. இதில் எவ்வித ஆக்கிரமிப்புமின்றி கோயில் கட்டுப்பட்டுள்ளது. இதேபோல ஜெகநாதன் நகரில் வீட்டுமனை பிரிக்கப்படும்போது, ஒதுக்கப்பட்ட 18 சென்ட் இடத்தில் 3 சென்டில் மட்டுமே ஞானவிநாயகர் கோயில் அமைக்கப்பட்டு வழிபாடு செய்து வருகிறோம். மேலும்15 சென்ட் இடத்தில் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், ஆக்கிரமிப்பில் உள்ளதாகக் கூறி செந்தில் நகர் செல்வ விநாயகர் கோயில், ஜெகநாதன் நகர் ஞானவிநாயகர் கோயில்ஆகியவற்றை இடிப்பதாக நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் மன அமைதியைக் கெடுக்கும் வகையில் அனுப்பப்பட்டுள்ள அறிக்கையை ரத்து செய்ய வேண்டும், எவ்வித இடையூறுமில்லாத கோயில்களை அகற்றக் கூடாது என மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

இதில், இந்து முன்னணி மாநில பொதுச் செயலாளர் வி.எஸ்.செந்தில்குமார், மாவட்டத் துணைத் தலைவர் எம்.சங்கர், நகரத் தலைவர் மதியழகன், நகரச் செயலாளர் சுதாகர், பொறுப்பாளர் சேகர், கோயில் கமிட்டி பொறுப்பாளர்கள் ஆர்.செந்தில்குமார், சி.செல்வம், ஊர் பொதுமக்கள் உள்பட 200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்ற அனுமதி: இந்து முன்னணி வரவேற்பு

திருப்பூர், நவ. 20: திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்ற அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் மூலம் ஹிந்துக்களின் உரிமை நிலைநாட்டப்பட்டுள்ளதாக இந்து முன்னணி வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கை:

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபம் ஏற்ற அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் மூலம் உலகம் முழுவதும் உள்ள ஹிந்துக்களின் உரிமை நிலைநாட்டப்பட்டுள்ளது. முருக பக்தர்கள் எதிர்பார்த்திருந்த மகிழ்ச்சியான செய்தியை உச்ச நீதிமன்றம் தந்துள்ளது.

இதற்காக கடந்த 35 ஆண்டுகளாக இந்து முன்னணியின் சார்பில் தொடர்ந்து நடைபெற்ற போராட்டங்கள் குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக நூற்றுக்கணக்கான வழக்குகளை இந்து முன்னணி பொறுப்பாளர்கள் சந்தித்துள்ளனர். கடந்த ஆண்டு சட்ட போராட்டத்தின் வாயிலாக தீபம் ஏற்ற சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை தீர்ப்பு வழங்கியும், அதை கடந்த திமுக அரசு செயல்படுத்தவில்லை. தியாகம், நீண்ட நெடிய போராட்டம், சட்ட போராட்டம், முருக பக்தர்களின் பிரார்த்தனை என எல்லாமும் இந்த தீர்ப்பை தந்துள்ளது. இதனால், நீதி வென்றதோடு, ஹிந்துக்களின் உரிமை நிலைநாட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

டிசெட் சார்பில் 31–ஆவது நிட்சிட்டி கைப்பந்து போட்டிகள்

ஜனவரி 9,10–இல் நடைபெறுகின்றன

திருப்பூர், நவ.20: திருப்பூர் விளையாட்டு மற்றும் கல்வி அறக்கட்டளை (டிசெட்) சார்பில் 31 ஆவது நிட்சிட்டி கைப்பந்து போட்டிகள் திருப்பூரில் 2027 ஜனவரி 9,10 ஆகிய இருநாள்கள் நடைபெற உள்ளன.

இது தொடர்பாக டிசெட் தலைவர் இ.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளதாவது:

2026-27 கல்வியாண்டிற்கான திருப்பூர் விளையாட்டு மற்றும் கல்வி அறக்கட்டளை (டிசெட்) சார்பில் திருப்பூர் பகுதி பள்ளி மாணவ, மாணவிகளுக்கிடையேயான 31-ஆவது நிட்சிட்டி கைப்பந்து போட்டிகள் வரும் 2027 ஜனவரி 9, 10 ஆகிய 2 நாள்கள் நடைபெற உள்ளது. மூத்தோர், மிக மூத்தோர் என இரு பிரிவுகளில் பள்ளி மாணவ, மாணவியருக்கு (இவ்வாண்டு பள்ளிக் கல்வித்துறையின் வழிகாட்டுதலில் கொடுக்கப்பட்டுள்ள வயதுப்பிரிவின்படி) போட்டிகள் நடைபெறும்.

ஜனவரி 9-ஆம் தேதி மாணவர்களுக்கான போட்டிகளும், ஜனவரி 10-ஆம் தேதி மாணவிகளுக்கான போட்டிகளும், அனைத்துப் பிரிவினர்களுக்கான இறுதிப்போட்டிகளும், அன்று மாலை பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறும். போட்டிகளில் பங்கேற்க நுழைவுக்கட்டணம் கிடையாது. போட்டி நாளன்று பங்கேற்கும் அனைவருக்கும் காலை, மதிய உணவும், இருவேளைகளில் சிற்றுண்டியும் டிசெட் சார்பில் வழங்கப்படும். போட்டிகள் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 96554 78132, 99446 39374 ஆகிய கைப்பேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி

திருப்பூர், நவ.20: திருப்பூர் வடக்கு காவல் போக்குவரத்து நிலையம் மற்றும் திருப்பூர் மக்கள் அமைப்பு ஆகியன சார்பில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

திருப்பூர் குமரன் நினைவு மண்டபம் முன்பு நடைபெற்ற இந்நிகழ்வில் தேவிப்பிரியா வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக போக்குவரத்து காவல் ஆய்வாளர் ரமேஷ் கலந்து கொண்டு நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்தார். திருப்பூர் மக்கள் அமைப்பின் முதன்மை ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார், ரக்க்ஷன் சக்திவேல் ஆகியோர் தலைமையில் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

அதேபோல, சாலைப் பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்ற வேண்டும், இருசக்கர வாகனம் இருவருக்கு மட்டுமே, தலைக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும் போன்றவற்றை பின்பற்ற வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. நிகழ்வில் சக்திவேல், நித்தியானந்தன், பரமேஸ்வரி, பன்னீர்செல்வம், துளசி, நடராஜன், நடனசபாபதி, பிரவீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாநில அளவிலான காவல் திறனாய்வு போட்டி: திருப்பூர் மாநகர போலீஸார் சாதனை

திருப்பூர், நவ.20: மாநில அளவிலான காவல் திறனாய்வு போட்டியில் திருப்பூர் மாநகர போலீஸார் சாதனை படைத்துள்ளனர்.

மாநில அளவிலான காவல் பணி திறனாய்வு போட்டிகள், தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் மற்றும் ஆவடி படைப் பயிற்சி மையத்தில் அண்மையில் நடைபெற்றன. இதில் மொத்தம் 368 போலீஸார் பங்கேற்றனர். மேலும் 68 மோப்ப நாய்களும் பங்கேற்றன. அறிவியல் சார்ந்த புலனாய்வு, கணினி மற்றும் கணினி விழிப்புணர்வு உள்ளிட்ட 6 பிரிவுகளில் 20 போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில், திருப்பூர் மாநகர போலீஸார் புகைப்படப் போட்டியில் முதலிடத்தையும், அறிவியல் சார்ந்த புலனாய்வு மற்றும் காவல் ஒளிப்பதிவு போட்டிகளில் 2ஆம் இடத்தையும் பெற்றனர். வெற்றி பெற்ற வர்களுக்கு தமிழக காவல் துறை தலைவர் மகேஷ்குமார் அகர்வால் கோப்பைகளை வழங்கிப் பாராட்டினார். அதேபோல, திருப்பூர் மாநகர காவல் துறை அதிகாரிகளும் வெற்றி பெற்ற போலீஸாருக்குப் பாராட்டு தெரிவித்தனர்.

ரயிலில் கஞ்சா கடத்திய ஒடிஸா பெண் கைது

திருப்பூர், நவ.20: திருப்பூரில் ரயிலில் 3 கிலோ கஞ்சா கடத்திய ஒடிஸா மாநிலத்தைச் சேர்ந்த பெண் கைது செய்யப்பட்டார்.

திருப்பூர் பகுதியில் கஞ்சா, குட்கா உள்ளிட்ட போதைப் பொருள்கள் கடத்தல் மற்றும் விற்பனையைத் தடுக்க போலீஸார் தொடர்ந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, திருப்பூர் வடக்கு போலீஸார் ரயில் நிலையம் அருகே வியாழக்கிழமை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ரயிலில் இருந்து இறங்கி சந்தேகத்திற்கிடமான வகையில் வந்த பயணிகள் சிலரை போலீஸார் சோதனை செய்தனர்.

இதில், ஒடிஸாவைச் சேர்ந்த ஜீவா குமார்(46) என்ற பெண்ணிடம் விசாரணை நடத்தி அவரது உடைமைகளைச் சோதனையிட்டனர். அப் போது அவர் 3 கிலோ கஞ்சாவை மறைத்து கடத்தி வந்தது தெரியவந்தது. இதையடுத்து அவரைக் கைது செய்த போலீஸார், கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர்.

SMFG Grihashakti

SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம் : 503&504, 5ஆவது தளம், G-பிளாக், இன்ஸ்பையர் BKC, BKC பிரதான சாலை, பாந்த்ரா குர்லா காம்ப்ளெக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை - 400051.
பதிவு அலுவலகம் : கயர்சோன் IT பார்க், டவர் B, முதல் தளம், எண் 111, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர், சென்னை - 600116, தமிழ்நாடு.

அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9(1)-இன் நெறிமுறையின்படி அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான 30 நாட்கள் மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனமான **SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** (இனி **SMHFC** எனக் குறிப்பிடப்படும்) ("ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம்")-இன் அதிகாரப்பூர்வ அலுவலரால் **கவனிஅ** எடுத்துக் கொள்ளப்பட்டதும், ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளதும் / ஈட்டுரிமை ஏற்படுத்தப்பட்டுள்ளதும், கீழே பட்டியலிடப்பட்டுள்ளதுமான அசையாச் சொத்துக்கள் ("கடனீட்டுச் சொத்துக்கள்"), கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் ஜாமின்தார்களிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனமான **SMHFC**-க்குச் செலுத்த வேண்டிய கீழ்க்குறிப்பிட்ட நிலுவைகள் மற்றும் வருங்காலத்தும் நாள் வரையிலான மேல்வட்டி, இதர செலவுகளை வசூலிப்பதற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி"** மற்றும் **"உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளன எனப் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்கள் மற்றும் ஜாமின்தார்களுக்குக் குறிப்பாகவும் இதன் மூலம் **அறிவிக்கப்படுகிறது.**

வ எண்	கடன்தாரர்கள் / ஜாமின்தார்கள் பெயர் / கடன் கணக்கு எண்	சொத்தின் விவரம்	குறைந்தபட்ச விலை / டேவணித் தொகை	மின்னணு ஏல நாள் மற்றும் நேரம்	டேவணித் தொகை சமர்ப்பிக்கும் நாள்
1.	LAN : 603439211646619 1. கார்த்திக் ராஜமாணிக்கம் 2. சத்யா பரமசிவன் 3. லட்சுமணசாமி மருதமுத்து 4. ஓம்பிரணவ் எண்டர்பிரைசஸ் (Ompranavh Enterprises)	I. சர்வே எண் : பழைய சர்வே எண் 78/3, உட்பிரிவிற்குப் பின் புதிய சர்வே எண் 78/3A; II. வருவாய்ப் பதிவின்படி 78/3A3; III. மொத்தப் பரப்பளவு 1230 சதுர அடி; IV. மனை எண் 42; V. இடம், கிராமம், நகரம், பதிவு மாவட்டம், சார்பதிவு மாவட்டம் முதலிய இருப்பிட விவரங்கள்: நாச்சிபாளையம் கிராமம், திருப்பூர் தெற்கு வட்டம், திருப்பூர் பதிவு மாவட்டம், "தொட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலகம்", "வெற்றிவேல் அவென்யூ"; VI.1230 சதுர அடி நிலத்தின் எல்லைகள்: மனை எண்கள் 43,44-க்கு **வடக்கில்;** மனை எண் 41-க்குத் **தெற்கில்;** 10 மீட்டர் சாலைக்குக் **கிழக்கில்;** சர்வே எண் 77 நிலத்திற்கு **மேற்கில். அளவு விவரங்கள் - வடபுறம்:** கிழக்கு-மேற்கு 56.10 அடி; **தெனபுறம்:** கிழக்கு-மேற்கு 55 அடி; **கீழ்புறம்:** தெற்கு-வடக்கு 22 அடி; **மேல்புறம்:** தெற்கு-வடக்கு 22 அடி. **மொத்தம்:**1230 சதுர அடி. கட்டடம் மற்றும் அனைத்து அனுபோகப் பாத்திய உரிமைகள் மற்றும் வழிநடை உரிமைகளுடன்.	ரூ.15,40,000/- ரூ.1,54,000/-	14.12.2026 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை	12.12.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கீழ்க்கண்டவாறு உள்ளன; விவரங்கள் எங்களது / ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் பின்வரும் இணையதள இணைப்புகளிலும் வழங்கப்பட்டுள்ளன **(https://BidDeal.in** மற்றும் **https://www.grihashakti.com/pdf/E-Auction.pdf)** ஏலத்தில் பங்கேற்க விரும்புபவர்கள் **திரு. மதுசூதனன் G, அலைபேசி : 9940444937, மின்னஞ்சல் : Madhusudanan.G@grihashakti.com மற்றும் திரு. நிலோய் டே, அலைபேசி : 8655619157, மின்னஞ்சல்** : Niloy.Dey@grihashakti.com ஆகியோரையும் தொடர்பு கொள்ளலாம்.

இடம் : திருப்பூர், தமிழ்நாடு
நாள் : 20.11.2026

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்,
SMFG இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: SF எண்.117, கதவு எண்.168 [3/2], UKPN காம்ப்ளக்ஸ், பழனி ரோடு, உடுமலைப்பேட்டை, தமிழ்நாடு-642126

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 வீதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர் /	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதியிட்டி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத் தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1189210170000017 / 1. Mr.ராதாகிருஷ்ணன் 2. Mrs.மஞ்சுளா	(i) 10.01.2025 & 01.01.2025 அன்றுள்ளபடி ₹ 12,12,288/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து பன்னிரண்டாயிரத்து எண்பத்தெட்டு மட்டும்) (ii) **அடையாளூர்வ சுவாதீனம் - 13.05.2025 & நேரடி சுவாதீனம் - 21.02.2026**	19.11.2026 அன்றுள்ளபடி ₹ 17,89,990.98 (ரூபாய் பதினேழு லட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு மற்றும் பைசா தொண்ணூற்று எட்டு மட்டும்)	₹ 15,31,000/- (ரூபாய் பதினைந்து லட்சத்து முப்பத்து ஒன்றாயிரம் மட்டும்)	₹ 1,53,100/- (ரூபாய் ஒரு லட்சத்து நூற்று முப்பத்து நூறு மட்டும்)

சொத்து விவரம்: திருப்பூர் பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, நத்தம் S.F.எண்.55, **துங்கம்பட்டி கிராமம், உடுமலைப்பேட்டை தாலுகா** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கில் 42 அடி, கிழக்கு மேற்காக தெற்கில் 33 அடி, வடக்கு தெற்காக கிழக்கில் 55 அடி, வடக்கு தெற்காக மேற்கில் 46 அடி **ஆக மொத்தம் 1932 சதுர அடி நிலம் அதிலுள்ள கட்டிடம்,** பொது சாலையை உபயோகிக்கும் உரிமை மற்றும் அனைத்து இதர அனுபந்தங்கள். அதன் கதவு எண்.2/48 சொத்து வரி 376 மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கருப்புசாமி-க்கு சொந்தமான வீட்டிற்கு வடக்கு, பழனி போயன் மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான வீட்டிற்கு தெற்கு, காளிமுத்து பழனிசாமி ஆகியோருக்கு சொந்தமான வீட்டிற்கு கிழக்கு, வடக்கு தெற்கு வழிப்பாதைக்கு மேற்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 10.12.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: **09.12.2026** அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	**08.12.2026** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டீஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.பிரபாகரன் Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பிட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:-support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 21.11.2026

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

SMFG IndiaCredit

SMFG இந்தியா கிரடிட் கம்பெனி லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம் : 11வது தளம், C விங், எம்பசி 247, எல் பகதூர் சாஸ்திரி மார்க், காந்தி நகர், விக்ரோலி (மேற்கு) மும்பை, மகாராஷ்டிரா - 400083

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("அந்த சட்டம்") மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 ("அந்த விதிகள்") ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ்.

கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின்கீழ் **SMFG இந்தியா கிரடிட் கம்பெனி லிமிடெட்டின் (SMFG இந்தியா கிரடிட்)** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் எனும் முறையில் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(12) அனுபந்த விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தி மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2)-இன் கீழ் கோரிக்கை அறிவிப்பினைப் பின்வரும் கடன்தாரர்(களுக்கு அனுப்பி அதில் குறிப்பிடுகிற தொகைகளை அவ்வறிவிப்புக் கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர்கள் கோரிக்கை அறிவிப்பு சேவையைத் நிறுவப்பட்டே தவிர்த்ததாகக் மீது கையொப்பமிட்டுள்ளார் காரணத்தோடு நம்புவதால் மேற்கூறிய விதிகளின்படி அறிவிப்பினை ஒட்டியும் பிரசுரித்தும் அறிவிப்புச் ச